# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண் - 9

# அறிவிப்புகள்
## 2012 - 2013

திரு. **அ. முஹம்மத்ஜான்**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்

## 1. பள்ளி மேற்படிப்பு
## கல்வி உதவித் தொகையினை உயர்த்துதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு தேர்வுக் கட்டணம் மட்டும் முழுமையாக அரசால் வழங்கப்படுகிறது. கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் முழுமையாக வழங்கப்படுவதில்லை. ஆதிதிராவிடர் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவது போல, 75,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் அவர்களது கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் முழுமையாக **ரூ.16.44 கோடி** செலவில் வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 2. மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் 1,000 மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல்

12ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் **1,000** இடங்களை பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த **1,000** மாணவ, மாணவியருக்கு, அவர்கள் பட்டப்படிப்பு முடிக்கும் காலம் வரை வருடத்திற்கு **ரூ.3,000/-** வழங்கிடவும், இதற்கென **ரூ.30 இலட்சம்** செலவினம் மேற்கொள்ளவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 3. தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா விருதுத் தொகையினை உயர்த்தி வழங்குதல்

மாவட்ட அளவில் 10ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் தந்தை பெரியார் விருதுத் தொகையையும், அதேபோல் 12ஆம் வகுப்பில் உயர்மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்லூரிகளில் சேரும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் பேரறிஞர் அண்ணா விருதுத் தொகையையும் **ரூ.5,000-லிருந்து ரூ.10,000-ஆக உயர்த்தி** வழங்கிடவும், இதனால் **1,792** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஆண்டொன்றுக்கு **ரூ.90 இலட்சம்** செலவினம் மேற்கொள்ளவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 4. கல்லூரி விடுதிகளுக்கு சூரிய ஒளி உபகரணங்கள் வழங்குதல்

**112** கல்லூரி விடுதிகளில் மின்விளக்கு மற்றும் மின்விசிறி பயன்பாட்டிற்காக சூரிய ஒளி உபகரண வசதியினை (Solar Photo Voltaic Power Plant) **ரூ.2.52 கோடி** செலவில் ஏற்படுத்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 5. கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் மேம்படுத்தும் திட்டம்

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றலை மேம்படுத்த ஒருவருக்கு **ரூ.2,800/- வீதம் 6,550** மாணவ, மாணவியருக்கு சிறப்புப் பயிற்சியினை **ரூ.1.83 கோடி** செலவில் அளித்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 6. விடுதி காப்பாளர்கள் கல்வியாண்டின் இறுதியில் ஒய்வு பெற அனுமதித்தல்

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் மற்றும் காப்பாளினிகள் கல்வியாண்டின் இடையில் ஓய்வு பெறும்போது பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படுவதைப் போன்று அந்த கல்வி ஆண்டு நிறைவடையும் வரை பணி நீட்டிப்பு வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 7. பயிற்சியாளர்களுக்கு மாதாந்திர பயிற்சிக்கால உதவித் தொகை வழங்குதல்

திறன் வளர்ப்பு பயிற்சி திட்டத்தில் (Skill Development Training) பல்வேறு பயிற்சிகளைப் பெறும் பயனாளிகளுக்கு மாதாந்திர பயிற்சிக்கால உதவித் தொகையாக **ரூ.400/-** வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 8. புதிய மகளிர் மேல்நிலைப்பள்ளி துவங்குதல்

கள்ளர் சீரமைப்புத்துறையின் மூலம் செக்கானூரணியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றினை **ரூ.2.22 கோடி** செலவில் துவங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 9. தொழில்நுட்பக் கல்லூரி துவங்குதல்

உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி மற்றும் செக்கானூரணியில் உயர்கல்வித் துறையின் மூலமாக மூன்று தொழில்நுட்பக் கல்லூரிகள் (பாலிடெக்னிக்) துவங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 10. செவிலியர் கல்லூரி துவங்குதல்

தேனி மாவட்டம், பெரியகுளத்தில் செவிலியருக்கான கல்லூரி ஒன்றினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் மூலம் துவங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 11. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 45 துப்புரவாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

பள்ளிக்கல்வித் துறையின் கீழுள்ள பள்ளிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளதைப் போன்று **45** கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு துப்புரவாளர் பணியிடங்கள் **ரூ.16 இலட்சம்** செலவில் தோற்றுவிக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 12. பொதுப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாவட்ட அளவிலான பரிசுத்தொகையை இருமடங்காக உயர்த்தி வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு இணையாக சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கும் பொதுப் பரிசுத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி முறையே **10**ஆம் வகுப்பிற்கு **ரூ.3,000/-, ரூ.2,000/- மற்றும் ரூ.1,000/-** என்றும் **12**ஆம் வகுப்பிற்கு **ரூ.6,000/-, ரூ.4,000/- மற்றும் ரூ.2,000/-** என்றும் வழங்கிடவும், இதற்கென ஆண்டொன்றுக்கு **ரூ.5.76 இலட்சம்** கூடுதல் செலவினம் மேற்கொள்ளவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 13. வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி புதிதாக உருவாக்குதல்

பள்ளிவாசல்கள், தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணி மேற்கொள்வதற்கு மாநில அளவில் புதிதாக **‘வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதி’** ஒன்று உருவாக்கிடவும், இதற்கு தேவையான நிதியினை கொடையாளர்களிடமிருந்து பெறவும், இந்நிதி நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் வகையில் தமிழக அரசு, வக்ஃப் நிறுவன மேம்பாட்டு நிதிக்கு **ரூ.3 கோடியினை** நடப்பு நிதியாண்டில் வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 14. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்களுக்கான இணைமானியத்தை இருமடங்காக உயர்த்தி வழங்குதல்

மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் திரட்டப்படும் நன்கொடை தொகைக்கு இணையாக அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகையினை **1:1** என்பதற்குப் பதிலாக **1 : 2** என்ற விகிதாச்சாரத்தில் உயர்த்தி வழங்கிடவும், இதற்கென ஆண்டொன்றிற்கு **ரூ.3.20 கோடி** கூடுதல் செலவினம் மேற்கொள்ளவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 15. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும் மற்றும் ஒரு பாலிடெக்னிக் விடுதியும்ஆரம்பித்தல்

**1,600** மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் **ரூ.3.31 கோடி** செலவில் பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு பாலிடெக்னிக் விடுதியும் ஆக **மொத்தம் 16 விடுதிகள்** துவங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 16. மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் கூடுதலாக 12 புதிய விடுதிகள் ஆரம்பித்தல்

**1,200** மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் **3** பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி விடுதிகளும், **3** சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளும், **6** பிற்படுத்தப்பட்டோர் பள்ளி விடுதிகளும் ஆக மொத்தம் 12 விடுதிகள் புதிதாக **ரூ.276.03 இலட்சம்** செலவில் துவங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 17. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் மாணவ, மாணவியருக்கு சிறப்பு வழிகாட்டி வழங்குதல்

பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் எழுதும் **2,21,400** மாணவ, மாணவியருக்கு **ரூ.2.47 கோடி** செலவில் **சிறப்பு வழிகாட்டி** (Special Guide) வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 18. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகவும் பின்தங்கிய 8 மாவட்டங்களில் தையல் இயந்திரங்கள் வழங்குதல்

பெரம்பலூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய 8 மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுக்கு கூடுதலாக **1,600** விலையில்லா தையல் இயந்திரங்கள் **ரூ.57.60 இலட்சம்** செலவில் வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

## 19. ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல்

10ஆம் வகுப்பு முடித்தவுடன் வறிய நிலையிலுள்ள பெரும்பாலான கிராமப்புற மாணவ, மாணவியர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்கின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த சுமார் **7,200** மாணவ, மாணவியருக்கு **ரூ.2.08 கோடி** செலவில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதைப் போல, விலையில்லா மிதிவண்டிகள் வழங்கிட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**அ.முஹம்மத்ஜான்**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்